10.10.2025.

கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம் (விரைவு நீதிமன்றம் )

விழுப்புரம்

அமர்வு வழக்கு எண்.87/2025

அ.சா.1

| | | | |
|---|---|---|---|
| பெயர் | கோகுலகிருஷ்ணன் | | |
| த/பெ | முருகன் | | |
| கிராமம் | புதுகருவாட்சி | தொழில் | எலக்ட்ரீசியன் |
| தாலுக்கா | விக்கிரவாண்டி | வயது | 25/2025 |
| மாவட்டம் | விழுப்புரம் | தேதி | 10.10.2025 |

இன்று உதவியாளர் அவர்களால் சத்திய பிராமணம் செய்யவிக்கப்பட்டு விசாரிக்கப்படுகிறார்.

முதல் விசாரணை

நான் தற்போது மேற்படி விலாசத்தில் வசித்து வருகிறேன். நான் எலக்ட்ரீசியன் ஆக தொழில் செய்து வருகிறேன். எனக்கு ஆஜர் எதிரிகள் பிரபு, வீரப்பன் ஆகியோர்களை தெரியும். அவர்கள் எனக்கு என்ன முறையாக வேண்டும் என்று சொன்னால் வீரப்பன் என்பவர் எனது மாமன் முறை ஆவார். பிரபுவும் எனக்கு மாமன் முறையாவார். எதிரிகளுக்கும் என் அப்பாவிற்கும் ஒரு நிலம் சம்பந்தமாக கடந்த எட்டு வருடங்களாக தகராறு இருந்து வந்தது. எதிரிகள் எனது அப்பாவை அடிப்பதும், அது சம்பந்தமாக எனது அப்பா காவல் நிலையத்தில் புகார் கொடுத்து, பிறகு காவல் நிலையத்தில் சமாதானமாக செல்வது என்பதும், கடந்த எட்டு வருடங்களாக வாடிக்கையாக இருந்து வந்தது. கடந்த 01/10/2024ம் தேதி மாலை சுமார் 5.00, 5-30 மணியளவில் நானும் எனது அப்பாவும் எங்களுக்கு சொந்தமான மோட்டார் சைக்கிளில் கொல்லைக்கு சென்று கொண்டிருந்தோம். அப்போது காமாட்சியம்மன் கோயில் அருகில் சென்று கொண்டிருந்தபோது, அன்னபூரணி என்பவரின் வீட்டின்

எதிரில், தங்கமணி என்பவரை எங்களுக்கு தெரியும். அப்பா அவருடன் பேசிக் கொண்டிருந்தார். அப்போது அங்கு எதிரிகள் வந்தார்கள். எதிரிகள் எனது அப்பாவிடம் ஆபாச வார்த்தைகளால் பேசி சண்டை செய்து கொண்டிருந்தார்கள். திடீரென்று எதிரிகள் நீ உயிருடன் இருந்தால்தானே ஆதார் கார்டை கொடுக்க மாட்டேன் என்கிறாய் உன்னை வெட்டி விடுவேன் என்று மிரட்டி கொண்டு இருந்தார்கள். அப்போது பிரபு அவரது மகனிடம் போய் கத்தியை எடுத்து வாடா என்று சொன்னார். அவரது மகன் சிறியவர் என்பதால் பயந்து கொண்டு போகவில்லை. அதனால் பிரபு அவரே சென்று கத்தியை எடுத்துக்கொண்டு இருசக்கர வாகனத்தில் அந்த இடத்திற்கு வந்து, திடீரென பேசிக் கொண்டிருந்தவர், எனது அப்பாவின் கழுத்தில் ஓங்கி ஒரே வெட்டாக வெட்டிவிட்டார். அந்த சமயத்தில் பிரபுவின் அப்பா வீரப்பன், பிரபு சரியாக நீ வெட்டவில்லை ஒழுங்காக வெட்டு என்று சொன்னார். நான் அந்த சமயத்தில் பயந்து ஓடும்போது என்னை எதிரிகள் பிடித்துக் கொண்டார்கள். எனது அப்பாவிற்கு நிறைய ரத்தம் வந்தது. அதன் பிறகு மீண்டும் பிரபு ஒரு வெட்டு வெட்டும் போது கத்தி என் அப்பாவின் சிறிதளவு மேலே பட்டு தரையில் பட்டது. அந்த சமயத்தில் சம்பவ இடத்திற்கு வந்த தங்கமணி என்பவர் எதிரிகளிடமிருந்து கத்தியை பிடுங்கி ஒரு பூச்செடி பக்கத்தில் போட்டுவிட்டார். அப்போது அருகாமையில் சத்யராஜ் என்ற ஒரு அண்ணன் இருந்தார். அவரிடம் ஆம்புலன்ஸுக்கு போன் செய்யுங்கள் என்று சொல்லி அவர் போன் செய்தார் ஆம்புலன்ஸ் வந்துவிட்டது. என் அப்பாவை முண்டியம்பாக்கம் அரசு மருத்துவமனைக்கு ஆம்புலன்ஸ் மூலம் கொண்டு சென்று சிகிச்சைக்கு சேர்த்தேன். அவர் உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்தார். என் அப்பா சிகிச்சையில் இருந்தபோது அன்று இரவு போலீசார் அவரிடம் வாக்குமூலம் வாங்க வேண்டும் என்று பார்த்தார்கள். அவரிடம் வாங்க முடியவில்லை என்பதால், என்னிடம் போலீசார் விசாரணை செய்து மருத்துவமனையிலேயே புகார் வாக்குமூலம் எழுதினார்கள். அதில் நான் கையொப்பம் செய்தேன். என்னிடம் காண்பிக்கப்படும் புகார் வாக்கு மூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். அந்த புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1 ஆகும். என்னால் என் அப்பாவை வெட்ட பயன்படுத்திய கத்தியைப் பார்த்தால் அடையாளம் காண்பிக்க முடியும். அந்த கத்தியை சாட்சி சரியாக அடையாளம் காண்பித்தார். அந்த கத்தி சா.பொ.1 ஆகும். இது சம்பந்தமாக என்னை போலீசார் விசாரணை செய்தார்கள்.

எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:-

இல்லை.

மறுவிசாரணை

இல்லை